# குற்ற வழக்கு தொடர்வுத்துறை

**நெ.5, காமராஜர் சாலை, சென்னை – 600 005.**

**<u>அலுவலக உதவியாளர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை</u>**

**<u>அறிவிக்கை எண் 1/2023, நாள் 15.12.2023</u>**

சென்னை குற்ற வழக்கு தொடர்வுத்துறை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்தை நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 05.01.2024 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

<table>
<tr><td>1.</td><td>பதவியின் பெயர்</td><td colspan="2">அலுவலக உதவியாளர்</td></tr>
<tr><td>2.</td><td>பணியின் தன்மை</td><td colspan="2">அரசு விதிகளின்படி சென்னை குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படை பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல், அலுவலக நடைமுறைப் பணிகளில் உதவிடுதல்.</td></tr>
<tr><td>3.</td><td>ஊதியம்</td><td colspan="2">ரூ.15700–58100/– (நிலை 1) என்ற ஊதிய விகிதத்தில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன்</td></tr>
<tr><td>4.</td><td>குறைந்த பட்ச வயது</td><td colspan="2">01.07.2023 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்</td></tr>
<tr><td>5.</td><td colspan="3">அதிகபட்ச வயது வரம்பு (01.07.2023 அன்றுள்ளவாறு)</td></tr>
<tr><td colspan="3">பொதுப்பிரிவு (GT)</td><td>32 வயது</td></tr>
<tr><td colspan="3">பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர்<br>(BC, BCM, MBC & DC)</td><td>34 வயது</td></tr>
<tr><td colspan="3">ஆதிதிராவிடர் (SC), பழங்குடியினர் (ST) மற்றும் ஆதரவற்ற விதவை பிரிவில் அனைத்து வகுப்பினர்<br>(DW–All categories)</td><td>37 வயது</td></tr>
<tr><td>6.</td><td>காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை</td><td colspan="2">1 (GT – Priority)</td></tr>
<tr><td>7.</td><td>இட ஒதுக்கீடு</td><td colspan="2">அரசு விதிமுறைகளின்படி நடைமுறைப்படுத்தப்படும்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 8. | கல்வித்தகுதி | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் தமிழில் எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும் |
| 9. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி | இயக்குநர்,<br>குற்ற வழக்கு தொடர்வுத்துறை,<br>நெ.5, காமராஜர் சாலை,<br>சென்னை – 600 005. |
| 10. | விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | 05.01.2024 மாலை 5.45 மணி வரை |

பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. மேற்கண்ட நியமனத்திற்கான நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யவோ, குற்ற வழக்கு தொடர்வுத்துறை இயக்குநர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத் தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளை தவறாது பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடம்: சென்னை
நாள்: 15.12.2023

**குறிப்பு:**

1. விண்ணப்பதாரர் இந்தியராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர் சென்னை மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்ப படிவம் சரியான தகவல்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். குறைபாடு உடைய, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் தவறான தகவல்களை அளித்துள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. நேர்காணலின்போது 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ் மற்றும் இதர அசல் சான்றிதழ்களுடன் வரப்பெற வேண்டும்.
5. மதிப்பெண் சான்றிதழ், வயது, இனம் மற்றும் இதர சான்றிதழ்களின் நகல்களில் சுய சான்றொப்பமிட்டு விண்ணப்ப படிவத்துடன் அனுப்ப வேண்டும்.
6. விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய கடைசி நாளான 05.01.2024 மாலை 05.45 மணிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
7. நேர்காணலுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பயணப்படி / அகவிலைப்படி அளிக்கப்படமாட்டாது.
8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். நேரிலோ அல்லது அலுவலகத்திலோ சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

# குற்ற வழக்கு தொடர்வுத்துறை

<u>அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்ப படிவம்</u>

விண்ணப்ப
தாரரின்
பாஸ்போர்ட்
அளவு
புகைப்படம்

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தந்தை / கணவர் பெயர் | |
| 3. | பிறந்த தேதி<br>(பள்ளி சான்றிதழ்படி) | |
| 4. | மதம் | |
| 5. | பாலினம் | ஆண் / பெண் / மூன்றாம் பாலினம் |
| 6. | வகுப்பு மற்றும் உட்பிரிவு<br>(உரிய சான்றிதழின் நகல் இணைக்கவும்) | |
| 7. | கல்வித்தகுதி<br>(சான்றிதழ் இணைக்கவும்) | |
| 8. | விண்ணப்பதாரர் சென்னை மாவட்டத்தை சார்ந்தவரா | ஆம் / இல்லை |
| 9. | நிலையான முகவரி | |
| 10. | கைப்பேசி எண் | |
| 11. | வேலைவாய்ப்பு பதிவு விவரம் (இருப்பின்) | பதிவு எண்:<br>பதிவு நாள்:<br>புதுப்பிக்கப்பட வேண்டிய நாள்: |
| 12. | இருப்பிட சான்றிதழ்<br>(ஆதார் எண் / வாக்காளர் அடையாள அட்டை எண் / குடும்ப அட்டை எண்) | |

| | | |
|---|---|---|
| 13. | தற்போது பணிபுரியும் விவரம் (ஏதேனும் இருப்பின்) | |
| 14. | உறுதிமொழி<br>மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் அதன் மீது எடுக்கப்படும் அனைத்து வகையான நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும், மேலும் என் மீது குற்றவியல் வழக்கு ஏதும் பதியப்படவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.<br><br>நாள்: விண்ணப்பதாரர் கையொப்பம் | |